# ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

**சென்னை, டிச. 17–**

மெட்ரோ ரயில் நிலையங்களில், ஐந்து நாட்களுக்கு நடைபெறும் இலவச கண் மற்றும் பல் மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், வாசன் கண் மற்றும் பல் மருத்துவமனையும் இணைந்து, இன்று முதல், 21ம் தேதி வரை, பல் மற்றும் கண் மருத்துவ முகாம்களை, மெட்ரோ ரயில் நிலையங்களில் நடத்த உள்ளன.




ஐந்து நாட்களுக்கு, காலை, 9:00 மணியிலிருந்து, 4:00 மணி வரை நடைபெறவுள்ள இந்த இலவச மருத்துவ முகாமில், மெட்ரோ ரயில் ஊழியர்கள், மெட்ரோ பயணியர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்கலாம் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்து உள்ளது.

**கண் மற்றும் பல் மருத்துவ முகாம் நடைபெற உள்ள மெட்ரோ ரயில் நிலையங்கள்**

| | |
|---|---|
| 17/12/18 – | அண்ணா நகர் கிழக்கு மெட்ரோ ரயில் நிலையம் |
| 18/12/18 – | அண்ணா நகர் டவர் மெட்ரோ ரயில் நிலையம் |
| 19/12/18 – | சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் |
| 20/12/18 – | கிண்டி மெட்ரோ ரயில் நிலையம் |
| 21/12/18 – | விமானநிலையம் மெட்ரோ ரயில் நிலையம் |